முற்பகல் 9.50

(ஆ) காவிரி நதிநீர் நடுவர் மன்றத் தலைமை நீதிபதி பதவியை நிரப்ப மத்திய அரசை வலியுறுத்துவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் நடுவர் மன்றத் தீர்ப்பை அமலாக்குவதில் தமிழ்நாடு அரசு மிகவும் தீவிரமாக உள்ளது. டில்லி உச்சநீதிமன்றம் பாரதப் பிரதமரின் முன்னிலையில் இரு மாநில அரசுகளும் பேசித் தீர்த்துக் கொள்ளவேண்டுமென்ற ஆணையைப் பிறப்பித்தது. இந்நிலையில் நடுவர் மன்ற நீதிபதி சித்தடோஷ் முகர்ஜி நீண்ட விடுப்பில் சென்றுவிட்டார். நடுவர் மன்ற நீதிபதியின்றி நடுவர் மன்ற ஆணையை நடைமுறைப்படுத்த இயலாது. எனவே வேறு ஒரு நீதிபதியை நடுவர் மன்ற நீதிபதியாக நியமிக்க மத்திய அரசை தமிழக அரசு உடனடியாக வலியுறுத்த வேண்டிய அவசியம் குறித்து தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், ஒரு நிமிடத்தில் பேசி முடிக்க வேண்டும்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆடிப் பட்டம் தேடி விதை' என்று சொல்வார்கள். இங்கே எங்களுக்கு காவிரியில் நடுவர் மன்ற உத்தரவுப்படி கூட நீர் கிடைக்காமல் காவிரிப் படுகையில் இருக்கக்கூடிய விவசாயிகள் எல்லாம் இப்போது மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தினாலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தங்களுடைய செல்வாக்கை மத்திய அரசிலே பயன்படுத்தி பேச்சு வார்த்தை மூலமாக உடனடியாக மீதம் இருக்கிற தண்ணீரை அந்த நடுவர் மன்ற ஆணைக்குட்பட்டு உடனடியாக விடுவதற்கு ஆவன செய்வாரா என்பதையும், அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி அவர்கள் வேண்டியதைப் போல நடுவர் மன்ற நீதிபதியை உடனடியாக நியமிப்பதற்கு ஆவன செய்து காவிரிப் படுகையில் வாழ்ந்து கொண்டிருக்கிற விவசாயப் பெருமக்களுக்கு உடனடியாக நீர் வழங்க உத்தரவிடுவாரா என்றும் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினையில் இன்று நேற்று அல்ல,

1996 ஜூலை 24] [கலைஞர் மு. கருணாநிதி]

நீண்ட நெடுங்காலமாக தமிழக அரசு, அது திராவிட முன்னேற்றக் கழக அரசாக இருந்தாலும், அருமை நண்பர் எம்.ஜி.ஆர். தலைமையில் நடைபெற்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாக இருந்தாலும், ஒரே நிலைதான் எங்கள் இரு கட்சிகளுக்குமிடையே உண்டு என்று நான் அல்ல, எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இந்த அவையிலேயே அறிவித்திருக்கின்றார். ஏனென்றால், இந்தப் பிரச்சினை 1968 முதல் பேசிப் பேசிப் பார்த்து தீராத பிரச்சினையாக ஆகிவிட்ட ஒன்று. அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான், பொதுப்பணித் துறை அமைச்சர் என்ற முறையில் நானும் கர்நாடகத்தினுடைய முதலமைச்சரும் பொதுப் பணித்துறையையும் தன் கையிலே வைத்திருந்த அமைச்சருமான வீரேந்திர பட்டீல் அவர்களும், நீர்ப்பாசனத் துறை அமைச்சராக மத்தியிலே இருந்த கே.எல்.ராவ் அவர்கள் முன்னிலையிலே பல முறை பேச்சுவார்த்தை நடத்தினோம். அதற்குப் பிறகும் தொடர்ந்து 27 தடவை பேச்சுவார்த்தைகள் நடைபெற்று எந்த முடிவும் ஏற்படவில்லை. முடிவை நெருங்கி வந்த நேரத்திலே சில பிரச்சினைகளால் அந்த முடிவைப் பயன்படுத்திக்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டது என்பது இந்த அவைக்கும் நாட்டுக்கும் நன்றாகத் தெரியும். ஒவ்வொரு கட்டத்திலும் அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கலந்து பேசி அதிலே குறிப்பாக அன்றைக்கு முன்னாள் முதலமைச்சர்களாக இருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களிடத்திலும், பெரியவர் பக்தவத்சலம் அவர்களிடத்திலும், நான் இந்தப் பிரச்சினைகளுக்காக மற்ற மாநில முதலமைச்சர்களோடு கலந்து பேசச் செல்கின்றபோதெல்லாம், அவர்களை அவர்களுடைய இல்லத்திற்குச் சென்று சந்தித்து அவர்களுடைய கருத்துரைகளையும் கேட்டு, ஆலோசனைகளையும் பெற்று பேச்சுவார்த்தை நடைபெற்று முடிந்த பிறகு மீண்டும் அவர்களுடைய இல்லம் சென்று அவர்களிடத்திலே நடைபெற்றவைகளை விளக்கி, அனைறைய சட்டமன்றக் கட்சித் தலைவர்களை எல்லாம் அழைத்துப் பேசித்தான் ஒவ்வொரு முடிவும் எடுக்கப்பட்டது. ஒரு கட்டத்திலே நாம் உச்சநீதிமன்றத்திலே தொடர்ந்திருந்த வழக்கைக்கூட பிரதமர் இந்திரா காந்தி அவர்களுடைய வேண்டுகோளின்படி திரும்பப் பெற்றபோதுகூட, 'subject to the condition' மீண்டும் எப்போது வேண்டுமானாலும் அந்த வழக்கைப் போடலாம் என்ற அளவிலே—அந்த வழக்கைத் திரும்பப் பெற்றபோதுகூட, திரும்பப் பெறலாம் என்ற அந்த முடிவு அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்து வைத்துப் பேசித்தான் எடுக்கப்பட்டது.

[கலைஞர் மு. கருணாநிதி] [1996 ஜூலை 24

முற்பகல் 9-55

இந்தப் பிரச்சினையில் என்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என்று இங்கே நம்முடைய ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தப் பிரச்சினையிலே தமிழக அரசு தீவிரமாக இருக்கின்றது என்பதை டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இதில் செல்வாக்கைப் பயன்படுத்துவது என்பதல்ல. நிலைமையை கர்நாடக மாநிலம் புரிந்துகொள்ள வேண்டும். நான் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதைப் போல, இது இரு நாடுகளுக்கிடையே உள்ள பிரச்சினை அல்ல. ஒரே நாட்டில், இரண்டு மாநிலங்களுக்கிடையிலேயான பிரச்சினை. இந்தப் பிரச்சினையை ஊதிவிட்டு, அதன் காரணமாக, கர்நாடகத்திலிருக்கிற தமிழர்களுக்கு ஒரு அவதியை உருவாக்கக் கூடாது என்று ஆளும் கட்சியிலே இருக்கிற நேரத்திலே மாத்திரமல்ல, நான் எதிர்க் கட்சியிலே இருந்த நேரத்திலேகூட, அப்படி ஒரு நிலை ஏற்படாமல், பாதுகாப்பதிலே மிகுந்த, சர்வ ஜாக்கிரதையாக இருந்தேன் என்பதை எல்லோரும் அறிவார்கள். இன்றைக்கு, இந்த நிலையை, பெரிய அளவிற்கு பூதாகாரமாக ஆக்க நான் முனையவில்லை. ஆனால், தஞ்சை, திருச்சி, காவிரி வட்டாரத்தில் விவசாயிகளுடைய பிரச்சினை பரிதாபத்திற்குரிய பிரச்சினை என்பதை கர்நாடக மாநிலத்திலே உள்ளவர்கள் உணர வேண்டும் என்பதை நான் மீண்டும் இந்த அவையின் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதிலே மத்திய அரசு தலையிடுவது தவறல்ல; தலையிட வேண்டும். பேச்சுவார்த்தை என அதிலே ஈடுபடுவது என்று வருகிறபோது, ஏதோ நாம் எல்லா உரிமைகளையும் விட்டுவிட்டு, அவர்களோடு பேசப் போவதைப் போல சிலபேர் கற்பனை செய்துகொண்டு, இதை ஒரு அரசியலாக்க எண்ணுகின்றனர். அப்படியல்ல. நடுவர் மன்றத்தினுடைய அந்த வரையறைக்குட்பட்டுத்தான் பேச்சுவார்த்தை என்று திருப்பித் திருப்பிச் சொன்னாலும் கூட, அந்த வாக்கியத்திலே உள்ள 'அந்த நடுவர் மன்றத்தினுடைய வரையறைக்குட்பட்டு' என்ற பகுதியை நீக்கிவிட்டு, 'ஆஹா, பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை' என்று சிலபேர் இன்றைக்கு அரசியலிலே லாபம் தேடிக் கொண்டிருக்கின்றார்கள். இந்தப் பிரச்சினையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவனாக இருக்கின்ற எனக்கும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக இருக்கின்ற அன்பிற்குரிய மூப்பனார் அவர்களுக்கும்,—'எல்லோரையும்விட' என்று சொன்னால், சில பேருக்கு கோபம் வரலாம்; இரண்டு பேருமே தஞ்சாவூர்க்காரர்கள் என்ற

1996 ஜூலை 24] [கலைஞர் மு. கருணாநிதி]

முறையில்—அதிக அக்கறையுண்டு என்பதை அவையிலே உள்ள உறுப்பினர்களும், நாட்டு மக்களும், தஞ்சைத் தரணியிலும், திருச்சித் தரணியிலும் வாழ்கின்ற காவிரி டெல்டாவினுடைய விவசாயிகளும் மிக நன்றாக அறிவார்கள். இதுபற்றி நாங்கள் இருவரும் பேசியிருக்கிறோம். இருவரும் பேசவேண்டிய இடத்திலே பேசியிருக்கிறோம். பேச வேண்டிய முறைப்படி பேசியிருக்கிறோம். உரிமைகளை விட்டுக் கொடுத்துவிட்டு, விவசாயிகளுடைய வாழ்விலே ஒரு பெரிய துயரத்தை உருவாக்கிவிட்டு அதை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்க, இந்த அரசு ஒருக்காலும் சம்மதிக்காது என்ற உறுதியை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நடுவர் மன்றத்தை உருவாக்குவதற்குக் காரணமாக இருந்ததே திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். தேசிய முன்னணி ஆட்சி பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களுடைய தலைமையிலே நடைபெற்ற போதுதான் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. நடுவர் மன்றம் அமைக்க வேண்டுமென்று தஞ்சை விவசாயிகள் சார்பாக ஒரு வழக்கு போடப்பட்டது. அந்த வழக்கில், தமிழக அரசு தன்னையும் இணைத்துக் கொண்டு, அந்த வழக்கை விரைவுபடுத்தியது. அந்த நேரத்திலே கேட்கப்பட்ட கேள்வி, டெல்லியின் முக்கியமான கேள்வி, 'இனி பேச்சுவார்த்தைக்கு இடம் இல்லையா' என்பதுதான். அப்போது பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்கள் தொலைபேசியிலே என்னைத் தொடர்பு கொண்டு கேட்டார்கள். அன்றைக்கு இம்மன்றம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. 'இனி பேச்சுவார்த்தைக்கு இடம் இல்லையா' என்று கேட்டார்கள். இடம் உண்டு என்று சொன்னால், நடுவர் மன்றம் கிடைக்காது என்று எனக்கு நன்றாகத் தெரியும். எனவே, நான் திரு. வி.பி.சிங் அவர்களிடத்திலே சொன்னேன் 'இடமில்லை' என்று. அப்படிச் சொன்னது மாத்திரமல்ல, உடனடியாக இந்த அவையிலே, ஒரு தீர்மானத்தை, இனி பேச்சுவார்த்தைக்கு இடமில்லை, நடுவர் மன்றம் ஒன்றுதான் வழி என்ற தீர்மானத்தை, நிறைவேற்றி அதை 'பேக்ஸ்' செய்தி மூலம் அன்றைய பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களுக்கு அனுப்பி வைத்தோம். அதை அரசாங்க வழக்குரைஞர் நீதிமன்றத்திலே எடுத்துச் சொன்ன பிறகு, நடுவர் மன்றத்திற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. திரு. வி.பி. சிங் அவர்கள் தயக்கமின்றி உடனடியாக நடுவர் மன்றத்தை அமைத்துக் கொடுத்தார்கள். அதற்கு, தேசிய முன்னணி அரசும், இங்கிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசும், இந்த அரசுக்கு உறுதுணையாக இருந்த அனைத்துக் கட்சியினுடைய

தலைவர்களும்தான் அன்றைக்குக் காரணம் என்பதை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன்.

இன்றைக்கு நடுவர் மன்றத்திலே ஒரு தொய்வு ஏற்பட்டிருக்கிறது. அதைத்தான் திரு. கிருஷ்ணசாமி அவர்கள் இங்கே சுட்டிக் காட்டியிருக்கின்றார்கள். நடுவர் மன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த சித்தடோஷ் முகர்ஜி அவர்கள் நீண்ட விடுப்பிலே சென்றுவிட்டார், அல்லது பதவி விலகி விட்டார் என்ற செய்தியின் அடிப்படையில் நாம் கோருவது எல்லாம் உடனடியாக அவரையே அந்தப் பொறுப்பில் நீடிக்கச் செய்ய பிரதமர் அல்லது மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்; அல்லது அவருக்குப் பதிலாக வேறு ஒருவரை நியமிக்கவேண்டும்; அப்போதுதான் நடுவர் மன்றம் முழுமைபெற்றதாக ஊனம் இன்றி இருக்கிறது என்று பொருள். அப்போதுதான் நடுவர் மன்றத்தை நாம் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்ற நிலை. எனவே, உடனடியாக அந்தக் குறையைப் போக்கவேண்டும் என்று மத்திய அரசை, இந்தத் தீர்மானத்தை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு, இந்த அவையின் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன். ஜூலை திங்களுக்குள்ளாக அப்படி அந்த நீதிபதி நியமிக்கப்படாவிட்டால் ஆகஸ்ட் திங்களில் இந்த மாமன்றத்திலே அது குறித்து ஒரு தீர்மானமே நிறைவேற்றி டெல்லிக்கு அனுப்பலாம் என்று இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10-00

***திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவிரிப் பிரச்சினை சம்பந்தமாக (குறுக்கீடுகள்) இதையொட்டித்தான் பேசுகிறேன். நானும் தீர்மானம் கூட கொடுத்திருக்கிறேன்; அதையொட்டித்தான் பேசுகிறேன். (குறுக்கீடுகள்) நல்லதற்காகத்தான் பேசுகிறேன். எல்லோருக்கும் பொதுவான பிரச்சினை. நான் விகற்பமாக ஒன்றும் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நீங்கள் அதற்கு விளக்கம் கொடுக்க வேண்டாம், விவரத்திற்கு வாருங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவரத்தைச் சொல்கிறேன். அதாவது காவிரி நடுவர் மன்றத் தீர்ப்புக்கு உட்பட்டுப் பேச வேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இப்போது சொல்கிறார்கள். அது

சரியல்ல. பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்காது, நடுவர் மன்றத் தீர்ப்புக்கு உட்பட்ட சட்ட நடவடிக்கைதான் நமக்குத் தேவை. அந்த நடவடிக்கை எதுவென்றால், 1956-ஆம் ஆண்டைய 2 மாநிலங்களுக்கு இடையேயான நதி நீர் தாவா சட்டம் என்ற அந்த சட்டப்படியான நடவடிக்கைதான் தேவை. அந்த நடவடிக்கை எடுப்பதற்கு, இந்தச் சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றும்போது இதையும் சேர்த்து நிறைவேற்ற வேண்டும். அப்படி நிறைவேற்றி விட்டு மத்திய அரசில் நமது மந்திரிகள் 4 பேர் இருக்கிறார்கள். எப்படி திரு. வாழப்பாடி அவர்கள் ராஜினாமா செய்தார்களோ, காவிரி நீர்ப் பிரச்சினைக்காக, அதேமாதிரி நம் ஆதரவை வாபஸ் பெறுவதற்கும் நடவடிக்கை எடுத்து நமது உணர்வைக் காட்டவேண்டும். அப்படி வாபஸ் வாங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.இ.அ.தி.மு.கவினருக்கு காவிரிப் பிரச்சினைகூட முக்கியம் அல்ல. (சிரிப்பு) தமிழ்நாட்டைச் சேர்ந்த 8 பேரில் 4 பேர் கேபினட் அமைச்சர்களாக இருப்பதும், 4 பேர் அங்கே ஸ்டேட் மினிஸ்ட்டர்களாக இருப்பதும்தான் கண்ணை உறுத்திக் கொண்டிருக்கிறது. எனவே, ராஜினாமா செய்யுங்கள், ராஜினாமா செய்யுங்கள் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். ராஜினாமா செய்வது என்பது சாதாரணமான ஒன்றுதான். அது ஒன்றும் பெரிய விவகாரம் அல்ல. இந்த அரசு கொள்கைக்காக இரண்டு முறை ஆட்சியையே இழந்த அரசு என்பதை மேசையைத் தட்டும ஒலி) திரு. தாமரைக்கனி அவர்களுக்கு ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்படியான நடவடிக்கை வேண்டும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதி கொடுக்கவில்லை, நீங்கள் உட்காருங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: காவிரி நீர்ப் பிரச்சினையில் சட்டப்படியான நடவடிக்கை வேண்டும்; பேச்சுவார்த்தை வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள் என்று சொல்லியிருக்கிறேன நான்.

திரு. இரா. தாமரைக்கனி: சரி.